DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.140/2021**

**P.W.2**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | ராதிகா |
| Husband Name | : | தங்கராஜ் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 23 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.
( 1, 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர்.)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது மல்லபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன இரத்தினவேல் என்பவர் எனது மூத்த அண்ணன் ஆவார். **அ.சா.1** வெள்ளைபாண்டி எனது தந்தை ஆவார். **சாட்சி எண்.2** பூங்கொடி எனது தாயார் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள். என் அண்ணனை கொலை செய்தவர்கள். திருப்பூரில் வேலை பார்த்த என் அண்ணன் அங்கு லாக்டவுன் இருந்ததால் எங்கள் ஊருக்கு 24.03.2020ம் தேதி அதிகாலை சுமார் 04.00 மணிக்கு வந்திருந்தார். அன்று மாலை 04.00 மணிக்கு என் அண்ணன் இரத்தினவேலும், 1வது எதிரி சந்தனமும் சண்டை போட்டதாக சொன்னார். அதற்கு என் அப்பா நாம் பார்த்துக்கொள்வோம் என்று சொல்லி வைத்தார். மறுநாள் 25.03.2020ம் தேதியன்று மாலை 06.00 மணியளவில் எனது தந்தை என் வீட்டில் அருகில் இருக்கும் தேவேந்திர குல வேலாளர் உறவு மேடைக்கு பக்கத்தில் சென்று வந்த போது 1வது எதிரி சந்தனம், 2வது எதிரி செல்லக்கண்ணு மற்றும் அவருடைய மனைவி 3வது எதிரி அன்னக்கிளி ஆகியோர்கள் என் தந்தையை தரக்குறைவாக பேசி உன் மகனால் தான் என் மகனுக்கு வேலை போய்விட்டது என்று சொல்லி உன் மகனை சொல்லாமல்

விடமாட்டேன் என்று கூறிய போது சப்தம் கேட்டு எனது தாயார், எனது அண்ணன் இரத்தினவேல் மற்றும் நான் ஆகியோர்கள் சண்டையை விலக்கிவிடுவதற்காக வந்தோம். அப்போது 1வது எதிரி சந்தனம் வைத்திருந்த கத்தியால் எனது அண்ணன் இரத்தினவேலின் இடதுபுற மார்பிற்கு கீழேயும், வலது பக்க இடுப்பு பகுதியிலும் குத்தி இரத்த காயம் ஏற்படுத்தினார். 2வது எதிரி செல்லக்கண்ணு என்பவர் கத்தியால் எனது அண்ணன் இரத்தினவேலுவின் வலது பக்கம் முதுகில் குத்தினார். 3வது எதிரி அன்னக்கிளி என் அண்ணனை கொலை செய்வதற்கு தூண்டிவிட்டார். அந்த இடத்தில் போய் பார்த்த போது எனது அண்ணன் இரத்தினவேல் கீழே இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அதன் பிறகு மணி என்ற மணிகண்டன், நல்லுச்சாமி, ரகுபதி மற்றும் சமயபாண்டி ஆகியோர்கள் இருசக்கர வாகனத்தில் எழுமலை வரைக்கு அழைத்துச்சென்று, அங்கிருந்து தனியார் ஆம்புலன்ஸில் வைத்து உசிலம்பட்டி பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக மதுரை பெரிய ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தார்கள். எனது தகப்பனாருக்கு போன் போட்டு கேட்ட போது எனது அண்ணன் இரத்தினவேல் இறந்துவிட்டதாக தகவல் கிடைத்தது. அதன்பின்பு 25.03.2020ம் தேதியன்று இரவு 11.00 மணியளவில் என் அப்பாவும், கேசரி என்பவரும் எம்.கல்லுப்பட்டி காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார்கள். போலீஸார் என்னை

26.03.2020ம் தேதி மாலை 01.00 மணிக்கு மேல் வந்து என்னை வீட்டில் வந்து விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :- மனுவின் பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.16 18:46:28 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.